உ

கடவுள் துணை.

நடேசர்சிந்து.



சென்னை - புரசை

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905

உ

விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது சென்னை பெரம்பூர் பாறக்ஸ் போஸ்டைச்சார்ந்த பெருமாள்பேட்டை வல்லம்பங்காருசெட்டி வீதி 25-வதுநெ, வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சுந்தரவிலாசஅச்சுக்கூடத்தில் அநேகவித தமிழ்புத்தகங்களும், நூதனமாக அச்சிட்ட புத்தகங்களும், அற்புதமானமருந்துவகைகளும், லப்பர் முத்திரை சீல்களும், றப்பர் எழுத்துகளும், ஜெர்மன்சில்வர் நகைகளும், தங்ககிலிட் நகைகளும், டொப்பி தினுசுகளும், பித்ஆட் என்னும் சடைத்தலை குட்டைகளும் உண்டு. விபரமாக அததின்விலை முதலானதும் தெரிந்துக் கொள்ளவேண்டுமானால் ஒருகடிதம் எழுதி ½-அணாடபால் முத்திரை அதில் வைத்து தங்கள் விலாசம்தெரிவித்தால் ஒரு அணா பெறும்படியான கேட்லாக்புத்தகம் 2-அனுப்பப்படும் பார்வையிட்டு தேவையான சாமான்களுக்கு எழுதலாம்.

முன்பணம் அனுப்பாமலேவால்யுபேபில் போஸ்ட்டில் தாங்கள் எழுதும்சாமான்கள் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பூ. சு. துளசிங்கமுதலியார்,

சுந்தரவிலாசம் பிரஸ்,

பெரம்பூர் பாறக்ஸ் போஸ்ட், மெட்ராஸ்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நடேசர் சிந்து.

சீரார்நடேசர் சிந்தென்றபாடல்
சீராகயானுரைக்க விநாயகா
சித்தம்வைத்தாளுமையா.

ஆனந்தநாதா ஆடியபாதா
மோனந்தமாகவந்தே நடேசா
முத்திதந்தாளுமையா (க)

அய்யபரமே ஆதிசிவமே
மெய்யாயுனைப்பணியும் நடேசா
மைந்தனைக்காருமையா (உ)

கங்கைதரித்தவாகாலனையுதைத்தவா
மங்கைசிவகாமியுடன் நடேசா
மலர்ப்பதந்தந்தாளையா (ங)

சிவகாமிபாகாசின்மயதேகா
பவமதைநீக்கியெந்தன் நடேசா
பிழைபொறுத்தாளுமையா (ச)

பஞ்சகிர்த்தியாதாரபரமதயாபர
கெஞ்சுறபஞ்சைமீது நடேசா
கிருபைகூர்ந்தாளுமையா (௫)

சந்திரசடாதரசாம்பசிவஹர
சுந்தரகிருபாகர நடேசா
சுகப்பொருள் தந்தாளையா (௬)

சரியைகிரியையோகம் சார்ந்தஞானமாக
கரியைப்போர்த்ததேக நடேசா
கடையனைக்காருமையா (௭)

பதஞ்சலிவியாக்கிரர்க்கும் பாததெரிசனம்
நிதந்தந்துகார்த்ததுபோல் நடேசா
நேசமாய்த்தந்தாளையா (௮)

புரமூன்றெரித்தவனே புண்ணியமானவனே
சிரமலைதரித்தவனே நடேசா
சிறியேனையாளுமையா (௯)

மோனஞானமான் மூலகாரணனை
ஆனந்தத்தாண்டவனே நடேசா
அடியேனைக்காருமையா (௰)

தில்லைச்சிதம்பரனே தொண்டர்துதி அரனே
அல்லல்படுவோனே நடேசா
ஆதரித்தாளுமையா (௰௧)

அன்னைதந்தையில்லை யன்பானபேருமில்லை
சொன்னே னுனையே யல்லால் நடேசா
சுகந்தர ஆருமில்லை (௰உ)

ஊரிருந்தென்ன உற்றாரிருந்தென்ன
ஆரிருந்துமென்ன நடேசா
அலையாதெனை யாளையா (௰௩)

நம்பினே னுன்னை நழுகவிடாதென்னை
அம்பிகைபாகாமுன்னை நடேசா
அன்பாயெனையாளையா (௰௪)

என்போலபாவி யுலகிலுலாவி
உன்னையே நிதங்கூரு நடேசா
உருகாதெனையாளையா (௰ரு)

பத்திசெய்யாச்சிறியேனைப் பாரிலலைவோனை
உத்தமமினமையனை நடேசா
யுறுதியாயாளுமையா (௰சு)

எப்போதுமித்தேகம் இருந்தென்னயோகம்
ஒப்பிலாவுன்பதத்தை நடேசா
உகமையாய்த் தந்தாளையா (௰எ)

ஆரணாரணற்கும் அனந்ததேவர்க்குங்
காரணமானவனே நடேசா
கருத்தாயெனையாளையா (௰அ)

நித்தியானந்தமூர்த்தி நிமலா அருள்புத்தி
பத்தியாயுனைப்பணியும் நடேசா
பாலகனைக்காருமையா (௰௯)

இத்தனைநாளும் எளியேன்படுந்துயரம்
த்தனேநீதீர்த்து நடேசா
சுகம்பெறப்பாருமையா (௨௰)

பலவினைதீர்க்கும் பத்தரைகாக்கும்
தவபலமானோர்துதி நடேசா
பத்தனைக்காருமையா (௨௧)

பஞ்சாட்சரப்பொருளே பரமசுகப்பொருளே
அஞ்சாமல் தந்தருளே நடேசா
அன்பனைக்காத்தருளே (௨௨)

திருத்தில்லைராயாதேவர்சகாயா
வருத்தந்தனைத்தீர்த்து நடேசா
வடியனைக்காருமையா (௨௩)

தேவாதிதேவா திருமால்விடைமேல்வா
மூவர்க்குமேலானவா நடேசா
முன்னடியேனைக்காருமையா (௨௪)

முத்திக்குகந்தவனே முகுந்தர்க்காழிதந்தவனே
நித்தந்துதிக்குமெனை நடேசா
நிலைமையுடனாளுமையா (௨௫)

அஷ்டதிசைப்பதி ஆனந்தமானநிதி
இஷ்டமாய்நல்லகதி நடேசா
ஈந்தெனையாளுமையா (௨௬)

ஐம்புலத்தாலே அடியைக்காணுதாலே
இன்பம்வைத்துன்னடியை நடேசா
ஏழைக்குத்தந்தாளையா (௨௭)

வையம்புகழ்மெய்யா மழுவேந்துங்கையா
ஒய்யாரமாகவந்தே நடேசா
உகந்தெனையாளுமையா (௨௮)

அஞ்செழுத்தோதியருந்தவத்தோர்துதி
குஞ்சிதப்பாதந்தந்துன் நடேசா
குழந்தையைக்காருமையா (௨௯)

ஆலவிடங்கண்டு அமரர்க்காகஉண்டு
நீலகண்டமானவரே நடேசா
நீயெனையாளுமையா (௩௰)

மாதர்வலையிற்பட்டுமயங்கினேனான்கெட்டு
பாதகனாகாமலே நடேசா
பட்சம்வைத்தாளுமையா (௩௧)

தும்புருநாரதரை தூய்சூதமுனிவோரை
சம்பிரமமாகக்காத்ததுபோல் நடேசா
சதிருடனாளுமையா (௩௨)

மால்மத்தளங்கொட்ட மலரோன்தாளந்தட்ட
கால்தூக்கி ஆடிநின்ற நடேசா
கழலிணைதந்தாளையா (௩௩)

பொன்னுலகவானோர் புகழ்மயிலாப்பூர்
தன்னிலேவளரற்புதனே கபாலீசா
ததியிதுவந்தாளையா (௩௪)

காஞ்சிபுரியானே காமனையெரித்தோனே
ஆஞ்சியடியேனுக்குன் ஏகாம்பரா
அருள்தந்துகாருமையா (௩௫)

திருவானைக்காவில் திருமால்தொழுங்கோவிலில்
உருவாகியேவிளங்கும் சம்புலிங்கா
உலகிலெனையாளையா (௩௬)

அண்ணாமலையான அன்பர்நிலையானே
உண்ணாமுலைப்பாகனே அருணாசலீசா
உகந்தெனையாளுமையா (௩௭)

திங்களணிநாதா தூயர்புகழ்பாதா
தங்கமயத்தென்காளத்தி நாயாகா
தமியேனைக்காருமையா (௩௮)

சீலமுனிவர்தொழும் செல்வசிகாமிமகிழ்
கோலப்பதங்களையே நடேசா
குறைவிலாதந்தாளையா (௩௯)

மந்திரமூலாமறையவர்நூலா
சுந்தரம்தொழும்சீலா நடேசா
சுந்தரர்க்கநுகூலா (௪௰)

ஆடும்நடேசர் ஆனந்தசிந்தை
பாடிப்படிப்போர்க்கு நடேசா
பரகதிதந்தாளையா (௪௧

நடேசர்சிந்து

முற்றிற்று.